ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ சிங்கமதாய் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ சிங்கமதாய் ‖

## திருவழுந்தூர் - 2

‡சிங்கமதாய் அவுணன்⋆ திறல் ஆகம் முன் கீண்டுகந்த⋆
சங்கம் இடத்தானைத்⋆ தழல் ஆழி வலத்தானை⋆
செங்கமலத்தயன் அனையார்⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற⋆
அங்கமலக் கண்ணனை⋆ அடியேன் கண்டு கொண்டேனே (1)

கோவானார் மடியக்⋆ கொலையார் மழுக் கொண்டருளும்⋆
மூவா வானவனை⋆ முழு நீர் வண்ணனை⋆ அடியார்-
க்காவா! என்றிரங்கித்⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற⋆
தேவாதிதேவனை⋆ யான் கண்டு கொண்டு திளைத்தேனே (2)

உடையானை⋆ ஒலி நீர் உலகங்கள் படைத்தானை⋆
விடையான் ஓட அன்று⋆ விறல் ஆழி விசைத்தானை⋆
அடையார் தென்னிலங்கை அழித்தானை⋆ அணியழுந்தூர்
உடையானை⋆ அடியேன்⋆ அடைந்துய்ந்து போனேனே (3)

குன்றால் மாரி தடுத்தவனைக்⋆ குல வேழம் அன்று
பொன்றாமை⋆ அதனுக்கருள் செய்த⋆ போர் ஏற்றை⋆
அன்றாவின் நறுநெய் அமர்ந்துண்ண⋆ அணியழுந்தூர்
நின்றானை⋆ அடியேன்⋆ கண்டு கொண்டு நிறைந்தேனே (4)

கஞ்சனைக் காய்ந்தானைக்⋆ கண்ண மங்கையுள் நின்றானை⋆
வஞ்சனப் பேய் முலையூடு⋆ உயிர் வாய் மடுத்துண்டானை⋆
செஞ்சொல் நான்மறையோர்⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற⋆
அஞ்சனக் குன்றம் தன்னை⋆ அடியேன் கண்டு கொண்டேனே (5)

பெரியானை⋆ அமரர் தலைவற்கும் பிரமனுக்கும்⋆
உரி யானை உகந்தான் அவனுக்கும்⋆ உணர்வதனுக்-
கரியானை⋆ அழுந்தூர் மறையோர்கள்⋆ அடிபணியும்
கரியானை⋆ அடியேன்⋆ கண்டு கொண்டு களித்தேனே (6)

www.prapatti.com

திரு வாழ் மார்வன் தன்னைத்⋆ திசை மண் நீர் எரி முதலா⋆
உருவாய் நின்றவனை⋆ ஒலி சேரும் மாருதத்தை⋆
அருவாய் நின்றவனைத்⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற⋆
கருவார் கற்பகத்தைக்⋆ கண்டு கொண்டு களித்தேனே (7)

நிலையாள் ஆக⋆ என்னை உகந்தானை⋆ நில மகள் தன்
முலையாள் வித்தகனை⋆ முது நான்மறை வீதிதொறும்⋆
அலையாரும் கடல் போல் முழங்கும்⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற⋆
கலையார் சொற்பொருளைக்⋆ கண்டு கொண்டு களித்தேனே (8)

‡பேரானைக்⋆ குடந்தைப் பெருமானை⋆ இலங்கொளி சேர்
வாரார் வனமுலையாள்⋆ மலர் மங்கை நாயகனை⋆
ஆரா இன்னமுதைத்⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற⋆
காரார் கருமுகிலைக்⋆ கண்டு கொண்டு களித்தேனே (9)

‡திறல் முருகன் அனையார்⋆ தென்னழுந்தையில் மன்னி நின்ற⋆
அற முதல்வன் அவனை⋆ அணியாலியர் கோன் மருவார்⋆
கறை நெடு வேல் வலவன்⋆ கலிகன்றி சொல் ஐயிரண்டும்⋆
முறை வழுவாமை வல்லார்⋆ முழுதாள்வர் வான் உலகே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com